Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸூ கார்த்திகை மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை (02 12 1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 6

# ஈழத்தமிழர் விடயத்தில் தலையிட இந்தியப் பிரதமருக்கு வற்புறுத்து!

## காங்கிரஸ் - அ. தி. மு. க. கோரிக்கை

சென்னை, டிசம்பர் 2

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும். — இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகரை இந்திரா காங்கிரஸ், அண்ணா தி.மு.க ஆகிய கட்சிகள் கூட்டாகக் கேட்டிருக்கின்றன.

இரு கட்சிகளினதும் எம். பிக்களைக் கொண்ட குழு ஒன்று இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தது.

இந்திரா காங்கிரஸ் எம். பிக்களான வாழப்பாடி இராமமூர்த்தி, திரு. ஜெய மோகன் ஆகியோருடன் அ.தி.மு. கவின் எம்.பியான சேடப்பட்டி முத்தையாவும் இக்குழுவில் இடம் பெற்றிருந்தார்.

இந்தக் குழு அண்மையில் புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரை சந்தித்துப் பேசியது.

இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் விடயம், இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசின் அணுகுமுறை ஆகியவை உட்பட வேறு பல முக்கிய விவகாரங்கள் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டதாகவும் தெரியவந்தது. [உ-எ]

## ஆனையிறவு முகாமில் படையினர் குவிப்பு?

மாங்குளம் முகாம், விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட பின்னர், ஆனையிறவு முகாமுக்கு அடிக்கடி ஹெலிகள் வந்துபோகின்றன.

ஆனையிறவு முகாமைப் பலப்படுத்தும்வகையில் இங்கு மேலதிகமாக படையினர் இறக்கப்படுகிறார்களோ என்றசந்தேகம்மக்களிடையே நிலவுகிறது.

இதனால் பரந்தன், குமரபுரம் பகுதி மக்கள் பீதி காரணமாக கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர். [ஒ-76]

## வவுனியா சேமமடுவில் புலிகள்-இராணுவம் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 2

வவுனியா சேமமடுப் பகுதியில் நேற்று முன்தினம் [வெள்ளி] பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணிவரை தொடர்ந்து கடும் மோதல்கள் இடம் பெற்றன.

மாமடு இராணுவ முகாமிலிருந்து காட்டு வழியாக- இளமருதங்குளம் ஊடாக- இராணுவம் முன்னேறிய போதே சேமமடு முதலாம் யூனிட்டில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடத்தினர் எனக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிப்பாயை மடக்கியவர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 2

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து தப்பி ஓடிய சிப்பாயை நடுக்காட்டில் மடக்கிப் பிடித்த பொதுமகனான பொன்னையா அருணாசலம் (54வயது) நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் காலமானார்.

இவர் காட்டுப்பகுதியில் தம்மைச் சந்தித்த சிப்பாயை தமது சமயோசிதத்தாலும், தீரத்தாலும் மடக்கிப் பிடித்தது பற்றியசெய்தி [illegible] உதயனில் வெளியானது தெரிந்ததே.

அந்தச் சம்பவத்தில் கிரனேட் வெடித்ததில் சிப்பாய் மரணமானதும், அருணாசலம் காயமடைந்ததும் தெரிந்தவையே. (அ-15)

## ரயில் தண்டவாளங்கள் பாவிப்பதற்கு புலிகள் தடை

யாழ்ப்பாணம், டிச. 2

ரயில் தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகள் ஆகியவற்றை பொதுமக்கள் பாவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகம் அறிவித்துள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மண்டைதீவில் கடற்படை தாக்குதல்; கடலில் மீனவர்கள் இருவர் பலி!

யாழ்ப்பாணம், டிச. 2

மண்டைதீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற குருநகர்ப் பகுதி மீனவர்களின் படகு மீது கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர்; மற்றொருவர் படுகாயமடைந்தார்; படகு முற்றாகச் சேதமுற்றது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடலில் படகை நிறுத்திவிட்டு, வலைவிரித்துக் காத்திருந்த மீனவர்கள் மீது திடீரென வந்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

அதனால் படகு முற்றாகச் சேதமுற்றது. அதிலிருந்த மீனவர்கள் இருவர் படகிலேயே உயிரிழந்தனர்.

காயமுற்ற மற்றைய மீனவர் ஒருவாறு நீந்தி கடலில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரியில் ஹெலி தாக்கி பலர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 2

நேற்றுக்காலை பத்து மணியளவில் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் பலர் காயமுற்றனர்:

இந்தத் தாக்குதலின்போது சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக கைதடி நவபுரத்தைச் சேர்ந்த கந்தையா ஸ்ரீகாந்தரூபி (வயது 19) என்ற இளம்பெண் படுகாயமுற்றார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## வடபகுதி மாணவர்களுக்கான இலவச பாடநூல் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 2

வட பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாட நூல்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது

யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகள் இது சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர்.

இதனால் அடுத்த ஆண்டு மாணவர்கள் தமக்குரிய இலவசப் பாட நூல்களை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-6]

## கீரிமலையிலும் வான் தாக்கு

யாழ்ப்பாணம், டிச. 2

கீரிமலைப் பகுதியிலும் நேற்று விமானத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சேத விவரம் தெரியவரவில்லை. [ஒ-5]

## சாம்பல்தீவில் பலர் கைது

யாழ்ப்பாணம், டிச. 2

கடந்த புதனன்று திருகோணமலைப் பகுதியில் சாம்பல்தீவை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்த பொதுமக்களைக் கைது செய்து, இரண்டு பஸ்களில் ஏற்றி திருகோணமலை நகருக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

## திருநெல்வேலி குண்டுவீச்சில் இருவர்காயம்;வீடுகள் சேதம்

கொக்குவில், டிச. 2

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் - ஆடியபாதம் வீதியில் - மருத்துவபீடத்திற்குச் சமீபமாக நேற்று முற்பகல் 11 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

இப் பகுதியில் இரு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் வீடுகள் சில சேதமடைந்தன. மின் கம்பிகள் அறுந்து விழுந்தன. திருநெல்வேலியைச் சேர்ந்த முத்து ஜீவரட்ணம் (40வயது), தினேஷ்(49வயது) ஆகியோர் காயமுற்றனர்.

வீடுகளில் இருந்தவர்கள் பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்புத் தேடிக்கொண்டதால், உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (ஒ-69-15-5)

## அளவெட்டியில் பெண் பலி!

அளவெட்டி, இராவத்தையில் - கூட்டுறவாளர் வீதியில்- ப. நோ. கூ. சங்கத்துக்குச் சமீபமாக நேற்று முற்பகல் 11 மணியளவில் பொம்மர் நடத்திய குண்டு வீச்சில் பெண்மணி ஒருவர் குடல் வெளியேறிய நிலையில் மரணமானார். சிலர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர் அளவெட்டி, இராவத்தையைச் சேர்ந்த விசாலாட்சி சிவபாலசிங்கம் [70 வயது] என்பவர் ஆவார்.

இப்பகுதியில் வீசப்பட்ட இரண்டு குண்டுகளினால் வீடுகள் சில சேதமடைந்தன. கால்நடைகள் சிலவும் இறந்தன.

இதேவேளை —

நேற்றுக் காலை கட்டுவன் பகுதியில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பிற்பகல் 2 மணியளவில் ஹெலியும் வலி. வடக்கில் பரவலாகத் தாக்குதல்களை நடத்தியது. [ஒ-86-68]

## இரத்தம்! இரத்தம்!! அவசரம் தேவை

யாழ்ப்பாணம், டிச, 2

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தம் சேமிப்பில் இல்லை.

இராணுவ நடவடிக்கைகளினால் படுகாயமுற்று பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் கொண்டு வரப்படுவோரின் உயிர்களை இதனால் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறை காரணமாக நேற்றும், நேற்று முன்தினமும் இரண்டு உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் போனதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். [illegible] போதிய [illegible] 30 பைந்த் இரத்தம் தேவைப்படுகிறது. மனிதாபிமானம் உள்ள பொதுமக்கள்தாமாக முன்வந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் செய்ய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரச சார்பற்ற நிறுவனங்கள் பொருள்கள் எடுத்துவரத் தடை!

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்கு [illegible]ற்பட்டுள்ள [illegible]ருகிறது.

வடபகுதி மக்களுக்குப் போதுமான அளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கப்பல்கள் மூலம் அனுப்பப்படுவதை ''நொண்டிச்சாட்டாக'' காட்டி அரசு முட்டுக்கட்டை போடுவதாக சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

புதிதாகஏற்பட்டுள்ள இந்த நிலைமையினால் அகதிமுகாம்களுக்கு தொடர்ந்து உதவி வழங்கமுடியாத நிலை தமக்கு ஏற்படும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த நான்கு மாதங்களாக 150 க்கும் மேற்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A, பருத்தித்துறை வீதி நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (15000)

அல்சேசன் நாய்க் குட்டிகள் (பெண்) விற்பனைக்கு உண்டு ஊசி ஏற்றியது தொடர்பு:- பொ. தில்லைராசா 3ஆம் கட்டை பருத்தித்துறை வீதி. கல்வியங்காடு (Organ Classes எதிர் வீடு. (14992)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் சில்லறைக் கடைகள். ஹோட்டல்களுக்குரிய, பேப்பர் வகைகள் வாங்கப்படும் விற்கப்படும். Senathirajah Second Hand Book House 13 ஸ்ரான்லி வீதி. (முரசொலி இலங்கைவங்கிக்கு முன்லேன்) யாழ்ப்பாணம். (14972)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் வேலைசெய்பவர்களுக்கும், அவர்கள் வீடுகளிற்கு வந்து தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [14985]

### A/L விஞ்ஞான வகுப்புகள்

Personal Classes B.M.C. முன் லேன், யாழ்ப்பாணம். 90, 91 & 92 வகுப்புக்கள் 01-12-90 சனி காலை 7.30 இற்கு ஆரம்பமாகின்றன. (சி/5470)

### ஆங்கிலக்கல்வி

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் (Individual Classes மற்றும் G C. E. (O/L) Dec 90 பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. செ. பாஸ்கரன் கே/பா. நா. உதயராசா. புதிய செம்மணி வீதி. நல்லூர், வடக்கு (14826)

### பெண் ரைப்பிஸ்ட் தேவை

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கும் கிளீன்சட் ஸ்தாபனத்திற்கு ஆங்கில ரைப்பிஸ்ட், தமிழ் ரைப்பிஸ்ட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் தங்கள் விண்ணப்பத்தை 37 சிவகுருநாதர் வீதி, பிரவுண் றோட் (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்கும் இடையில்) நேரடியாக டிசம்பர் 12ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். [சி/5465)

### திருமண சேவை

என்ஜினியர், எக்கவுண்டன்டாக்டர்கள், ஆசிரியர்கள் லிகிதர்கள், Technical Offic-ers மற்றும் வேறு தொழில் புரியும் மணமக்களின் சாதகக் குறிப்புக்கள் கைவசம் உள்ளன. உடன் தொடர்பு கொள்க. அடம்ஸ் பீக் ட்ரவல்ஸ், முருகன் வீதி, ஆடியபாத வீதி, ஊடாக, பழஞ் சந்தி, திருநெல்வேலி வடக்கு, (14983)

### பிரத்தியேக வகுப்புக்கள்

ஆண்டு 7 தொடக்கம் A/L வரையான கணித, விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தொடர்பு;- M.K பாஸ்கரன் 95, சந்தான மாதா கோவில்வீதி, யாழ்ப்பாணம், (14988)

### தவறிவிட்டது

வேலன் துரைசிங்கம் சட்டுவன் மேற்கு 590692050 V அடையாள அட்டை கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவு செய்து கொடிகாமம் கூ. பார் அல்லது வீ. பாலசிங்கம் திலீபன்நகர் மிருசுவிலில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (14672)

### ஞானம்ஸ் ஸ்ரூடியோ

காலை 09 மணி தொடக்கம் 01 மணிவரையும் கலர் பிலிம் றோல்கள் கழுவுதல் படங்கள் செய்தல் கறுப்பு வெள்ளை படங்கள் பிடித்தல் படங்களை பெரிதாக்குதல், புளொக் ஆகிய சேவைகளை தற்பொழுது வழங்குகின்றது. என்பதை அறியத் தருகின்றோம். 301, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5478)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராசதுரை பஞ்சாட்சரம்

உரிமையாளர்:-
அருள் முருகன் ஜுவலர்ஸ்
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம்:
18 - 11 - 1936
மறைவு
04 - 12 - 1987

அன்பினால் எம்மை வளர்த்து அறிவொளியூட்டி வளமுடன் வாழவழி வகுத்து எம் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பும் பாசமும் எம் மனதை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்,**
**மருமகன்,**
**பேத்தி**

பெருங்குளம்,
சாவகச்சேரி,
[14981]

## காணவில்லை

கண்ணா ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் மகன் தங்கசாமி, ராதாகிருஷ்ணன் என்பவரும், மகேஸ்வரி ஹாட்வெயர்ஸ் உரிமையாளரின் மகன் ஆறுமுகம் நயினார் புனிதவாசன் என்பவரும் 13 - 06 - 90 இல் இருந்து காணவில்லை. இவர்களைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் ஆர். திருநாவுக்கரசு, 'இராச பவனம்' வியாபாரிமூலை, பருத்தித்துறை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [15002]

## 47ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

தோற்றம்: 14 | 05 | 963



மறைவு: 18 | 10 | 1990

18 - 10 - 90 ல் மல்லாகத்தில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சால் அகால மரணமடைந்த

செல்வன்

### சதாசிவம் விமலசந்திரன் [விமல்]

[ - Dip in Eng - ]

மின்னலென நீ மறைந்தாய்
உன் பிரிவால் நாம் வாடுகின்றோம் - இந்தியாவில்
பட்டங்கள் பெற்றாய் - இன்று
நூலறுந்த பட்டம் போல் நாம் கலங்குகின்றோம்
மணவிழா காணும் நேரம் கொடியவிதி
மரண விழா காட்டியது!

ஆறாத்துயர் தந்து மீளாத்துயில் கொண்டாய் எம் கண்ணீரே உமக்குக் காணிக்கை. அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அந்தியேட்டிக் கிரியைகள் 3 - 12 - 90 இலும் வீட்டுக் கிருத்தியம் 4 - 12 - 90 இலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
**தாய், சகோதரர்கள் உறவினர்கள்,**

வேதவில்லா, மல்லாகம். [14996]

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மண்ணில் மலர்வு
16 11 . 1909

விண்ணக வாழ்வு:
02 - 12 - 1989

அமரர்

### திரு. அருளானந்தம்

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் எல்லோரும் வாருங்கள்
உங்களை நான் இளைப்பாற்றுவேன்
(மத். 2. 12)

அன்பு, பண்பு, தாழ்மை, பொறுமை, ஆகிய நற்குணங்களால் எங்களை ஆட்கொண்டு அன்பின் பாதையில் அனைவரையும் வழிநடத்திய எங்கள் பாசம் மிகுந்த தந்தையே! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதம் பணிந்து நித்திய இளைப்பாற்றியை அளித்தருள வேண்டிநிற்கிறோம்.

மனைவி ஞானம்மா அருளானந்தம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

வசந்தம்
[illegible]
(14970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## St Patrick's College - Jaffna
## பிரவேச விண்ணப்பம் 1991

**பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

முதலாம் வருடம்: 1-2-85 — 31-1-1986 க்குள் பிறந்திருக்க வேண்டும்.
4ஆம் வருடம்: 1982இல் பிறந்திருக்க வேண்டும்.
6ஆம் வருடம்: 1980இல் பிறந்திருக்க வேண்டும்.
9ஆம் வருடம்: 1977 இல் பிறந்திருக்க வேண்டும்.

- ☐ விண்ணப்பப்பத்திரம்:- ரூபா 30.00 [பரீட்சைக் கட்டணம் உட்பட] 3-12-90 தொடக்கம் 20 - 12 - 90 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.
- ☐ நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவங்களை 28-12-90 திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9.00 தொடக்கம் 12 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.
- ☐ தபால் மூலம் வரும் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- ☐ பிரவேசப் பரீட்சைத்தினம் 7-1-1991 காலை 8.30 மணிக்கு
- ☐ 6ஆம் 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் பத்து வீத மாணவர்களுக்கும் கடந்த வருடம் போல் யாழ் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

**- கல்லூரி அதிபர்.**

[சி-5479]

## 8 ஆவது நினைவஞ்சலி

**அப்பாப்பிள்ளை சிவகுருநாதன்**
[சிரேஷ்ட சட்டத்தரணி கொழும்பு]

மறைவு: 02-12-1982



நாடினோர்க்கு நல்லுதவி புரிந்து, நேர்மையின் கருவூலமாய், பொது மக்களின் தோழனாய், ஐயத்துக்கிடமின்றி வழக்குவாதம் அமைந்து வீரம் படைத்தவரானார்.

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்

**அன்பு மனைவி**
**இராசலட்சுமி**

ஆலடி, ஆனைக்கோட்டை, [சி-5473]

## ஓராண்டு நினைவஞ்சலி



### தம்பையா பத்மநாதன்

(பிரபல மண்டான் க. மு. சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர்)

**அன்னை மடியில்:** 26 - 01 - 1940
**இறைவனடியில்:** 13 - 12 - 1989

திதி: 02 - 12 - 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மனைவி, ஆருயிர் பிள்ளைகள்,**
**மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

தேவி அகம்,
கரவை மேற்கு, கரவெட்டி. [14675]

# உதயன்

## இலக்கு நோக்கிய அம்புகள்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நெடுஞ்சாலைகளையும், பெருவீதிகளையும் திருத்தும் வேலைகளை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதனால் உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்யும் வேலைகள் ''தொப்பென''ப் போடப்படுகின்றன.

எழுபதுகளில் இருந்தே, தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி, திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்தமை வரலாறு. தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியதில் இருந்து, அதற்குத் தண்டனை விதிப்பது போல, பழிவாங்குதல் நடவடிக்கையாக வடக்கு-கிழக்கின் அபிவிருத்தி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது; தடுக்கப்பட்டது.

அதன் விளைவாக, தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு, சகல வழிகளாலும் தடைக்கல் நடப்பட்டது. விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஆகிய மூன்று பிரதான பொருளியல் துறைகளின் வளர்ச்சி ஒட்ட நறுக்கப்பட்டது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற உபதுறைகளிலும் வளர்ச்சி தடுக்கப்பட்டது. ஏன், கல்வி, வீடமைப்பு, வைத்திய வசதிகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை செய்து கொடுப்பதற்குக் கூட, அரசுகள் பின்னடித்தன.

தமிழர்களின் வாழ்க்கை நிலையை பல வருடங்களுக்குப் பின்தள்ளிவிட வேண்டும் என்ற இலக்குடன், புறக்கணிப்பும், பாரபட்சமும் ஊழிக் கூத்தாடுகின்றன. மாறி மாறி வரும் அரசுகள், பெரும் கனத்துடனும், உத்வேகத்துடனும் அந்த இலக்கை அடையத் தம்மாலான சகல முயற்சிகளையும் செயலாக்கி வருகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற கடன் வழங்கு நிறுவனங்களோ, இலங்கை அரசுகளின் இந்த மாற்றாந்தாய் செயற்பாடுகளைத் தெரிந்தும் தெரியாதவை போல கவனத்தில் எடுப்பதில்லை.

குறிப்பாக உலக வங்கி அதில் அக்கறைப்படுவதில்லை. தாம் காலால் இடும் கட்டளையை தலையால் ஏற்றுச் செய்யும் கொழும்பு அரசை ஏன் அவை தட்டிக் கேட்கப்போகின்றன! உலக வங்கி எந்த நிபந்தனையை விதித்தால் என்ன, எத்தகைய கட்டுப்பாட்டைப் போட்டால் என்ன, அவை எல்லாவற்றையும் மறுகேள்வி இல்லாமல் கொழும்பு அரசு செய்கிறது. அதற்குப் பிறகும், தாம் வழங்கும் பணம் எப்படிச் செலவாகிறது என்பதில் ஏன் அவை அக்கறைப்படப்போகின்றன; இதுவரை பதவிகளில் இருந்த அரசாங்கங்களைவிட இப்போதைய கொழும்பு அரசு உலக வங்கிக்கு முழு அடிமையாகி இருப்பது உலகம் அறிந்த பரம இரகசியம்.

தான் நிதி வழங்கு நிறுவனங்களுக்கு அடிமையாகிக் கொண்டு, தமிழர்களைத் தனது அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி திமிருடன் நடைபோடுகிறது அரசு.

வீதிகள் திருத்த வேலைகளை மட்டுமென்ன, எல்லா வளர்ச்சித் திட்டங்களையுமே அது நிறுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தனது இலக்கு நோக்கி அது அம்புகளை எய்துகொண்டே இருக்கும்!

# கிளிநொச்சியில் பரவலாக

# பொம்மர்கள் குண்டு வீச்சு

## ஒருவர் பலி; பலர் காயமடைந்தனர்

கிளிநொச்சி, டிச. 2

கிளிநொச்சிப் பகுதியில் வெள்ளியன்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதல்களில் ஒருவர் பலியானார். பல பொதுமக்கள் காயம் அடைந்தனர். கட்டடங்கள் சேதம் அடைந்தன.

வட்டக்கச்சி, கிளிநொச்சி நகரம், திருநகர், பரந்தன் குமரபுரம் ஆகிய இடங்களில் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

முதலாவது குண்டு வீச்சு வட்டக்கச்சியில் இடம் பெற்றது

நண்பகல் 11 மணியளவில் வட்டக்கச்சிக்கு வந்த 4 பொம்மர்கள் வட்டக்கச்சி சந்தைப் பகுதியில் நான்கு குண்டுகளை அடுத்தடுத்து வீசின. குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் கந்தையா - சண்முகம் (65 வயது) என்பவர் அந்த இடத்தில் மரணமடைந்தார். இராமநாதபுரத்தைச் சேர்ந்த தந்தையும் மகனுமான சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (வயது 65), கணபதிப்பிள்ளை தியாகராசா [வயது 38], மற்றும் வல்லிபுரம் பரமானந்தம் (வயது 35) ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

குண்டுவீச்சில் கமநலசேவை நிலையம், கள்ளுத்தவறணை மற்றும் பல அரச கட்டடங்களும் பலத்த சேதம் அடைந்தன.

இதனை அடுத்து 11.30 மணி அளவில் பொம்மர்கள் கிளிநொச்சி நகரப் பகுதிக்குள் பிரவேசித்து சிறிது நேரம் நகரை வட்டமிட்டன. பின்னர் கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கும், டிப்போசந்திக்கும் இடையில் அமைந்துள்ள கிளிநொச்சி அரச அதிபரின் விடுதியை நோக்கி இரண்டு குண்டுகளை வீசின. இதனால் அரசாங்க அதிபரின் விடுதி பலத்த சேதம் அடைந்தது.

பின்பு பிற்பகல் 1.30 மணி அளவில் 3 பொம்பர்கள் கிளிநொச்சிக்கு வந்து குண்டு வீச்சைத் தொடர்ந்தன. இதில் இரண்டு குண்டுகள் திருநகரில் அமைந்துள்ள கிளிநொச்சி மயானத்தில் வீழ்ந்து வெடித்தன. இந்த விமானக் குண்டு வீச்சுக்களினால் கிளிநொச்சிப் பகுதி முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது. [இ-76]

## குமரபுரத்திலும் குண்டு வீச்சு

வெள்ளியன்று பரந்தன் பகுதியிலும் பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தின.

குமரபுரம் கந்தசுவாமி கோவில் பகுதியில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இந்த குண்டு வீச்சின் போது வீட்டில் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த தாயும், மகளும் படுகாயம் அடைந்தனர்.

அ. புவனேஸ்வரி (வயது 52) அ. அருணா (வயது 15) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்கள் ஆவர்.

வீடு ஒன்றும் சேதம் அடைந்தது.

காயம் அடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (இ - 76)

# சிறந்த 3 கூ. சங்கங்களுக்கு மாவீரர் தினப் பரிசுகள்

யாழ்ப்பாணம், டிச. 2

மாவீரர் தினத்தையொட்டி, யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்கள் நடத்திய போட்டியில் நெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றது.

நீர்வேலி ப. நோ. கூ. சங்கம் இரண்டாம் இடத்தையும், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

மாவட்டத்தில் மொத்தம் உள்ள 23 ப. நோ. கூ. சங்கங்களில் முன்கண்ட மூன்றும் மிகச் சிறந்த சேவைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

கோண்டாவில் மாதிரிச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ப. நோ. கூ. ச. பொது முகாமையாளர்கள் மாநாட்டில் வைத்து பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்துக்குக் கிடைத்த பரிசு மற்றும் சான்றிதழை சங்கக் கணக்காளர் திரு. எஸ். முத்துவேலு பெற்றுக்கொண்டார்.

தீவுப்பகுதியில் போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த சூழலிலும், இராணுவ நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் எமது நிர்வாகமும், ஊழியர்களும் பலவித சிரமங்களையும் அனுபவித்து உழைக்க நேர்ந்தது. பொதுமக்களுக்கு உதவவேண்டும் என்ற சேவை உணர்வுடன் அவர்கள் ஆற்றிய பணிக்கே இப்பரிசு கிடைத்திருக்கிறது- என்று திரு. முத்துவேலு உதயனுக்குத் தெரிவித்தார். [அ]

## ரயில் பயணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு ரயில் மூலம் வரும் பயணிகள் போக்குவரத்து இல்லாததாலும், அங்கு நிலவும் பதற்றமான சூழ்நிலையாலும் காடுகளுக்குள்ளால் யாழ்ப்பாணம் வந்து சேருகின்றனர் (இ - 3)

## தென் இந்திய திருச்சபை நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச. 2

தென் இந்திய திருச்சபையினர் குழந்தைகளுக்கு பால் மாவகைகளை நிவாரணமாக நேற்று வழங்கினர்.

88 ஆண்டுக்குப்பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டது.

200 குழந்தைகளுக்கு லக்ஸ்பிறே, லக்டோஜன் பால்மா வகைகள் வழங்கப்பட்டன (இ - 3)

# வட பகுதி உப்பள ஊழியருக்கு சம்பளம் வழங்க மறுப்பு

வடபகுதி உப்பளங்களில் கடமை புரியும் 350 ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க உப்புக் கூட்டுத்தாபன தலைமைப் பீடம் மறுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் இருந்து சம்பளம் கிடைக்காததால் இது தொடர்பாக பேச்சுக்கள் நடத்த கூட்டுத்தாபன வடபகுதி அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றிருந்தது

விற்பனை செய்யமுடியாத நிலையில் உப்பு உள்ளதால் வருமானம் எதுவும் இல்லை, உங்களுக்கு வேலையும் இல்லை. அத்துடன் சம்பளம் வழங்க பணமும் இல்லை. திறைசேரியுடன் தொடர்பு கொண்டு சம்பளம் வழங்க முயற்சிப்போம்' என்று இந்த அதிகாரிகள் குழுவிடம் கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாம்.. (இ-3)

## வயாவிளான் வித்தியாலயம் உரும்பராயில்

யாழ்ப்பாணம், டிச. 2

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாளை திங்கள்முதல் உரும்பராய் இந்துக் கல்லூரியில் இயங்க உள்ளது. (இ)

### யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில்

# பிரதான வீதிகள் புனரமைப்பை உடனடியாக நிறுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள போக்குவரத்து வீதிகளின் திருத்த வேலைகளை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது

இந்த மாவட்டங்களில் உள்ள பிரதான வீதிகளைச் செப்பனிடும் வேலைகள் உலக வங்கியின் உதவியுடன் மூன்றாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும் திருத்த வேலை எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும், அவற்றை உடனடியாக நிறுத்துமாறும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதன் யாழ். கிளையைப் பணித்துள்ளது.

ஏ, பி தர வீதிகளைத் திருத்த வேண்டாம் என்று அதிகாரசபை பணித்துள்ள அதே நேரத்தில், சி, டி தர வீதிகளைத் திருத்த பணம் இல்லை என்று வடக்கு - கிழக்கு மாகாண சபை வீதி அபிவிருத்தித் திணைக்களம் கைவிரித்துள்ளது.

ஏ, பி தர வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையும், சி, டி தர வீதிகளை மாகாணசபை வீதி அபிவிருத்தி திணைக்களமும் திருத்தம் செய்வது தெரிந்ததே.

அத்துடன் புனர்நிர்மாண வேலைகளுக்கான ஆலோசனைச் சபையில் கடமையாற்றிய நிபுணர்களையும் அதிகாரசபை வேலையில் இருந்து நேற்று முன்தினம் முதல் இடை நிறுத்தியுள்ளது. (ஒ-3)

# குடிதண்ணீர் பெறச் சென்ற 'குமண' மாவுடன் திரும்பியது

யாழ்ப்பாணம், டிச. 2

திருகோணமலைக்கு குடிதண்ணீர் எடுக்கச் சென்ற குமண கப்பல் 600 தொன் மாவுடன் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தது. அதிலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமானது.

பருத்தித்துறைக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வந்த இந்தக் கப்பல் பொருள்களை இறக்கிக்கொண்டு இருந்துவிட்டு, இடைநடுவில் குடிதண்ணீர் பெறுவதற்காக திருகோணமலை துறைமுகத்துக்குச் சென்றது தெரிந்ததே.

பருத்தித்துறையில்பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'விங்கோ றேட்ஸ்' நேற்றுக் கொழும்பு திரும்பியது. [ஒ-3]

### யாழ். பல்கலைக் கழகத்துக்கு

# இரசாயனப் பொருள்களை தருவிக்க அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான, மருத்துவபீடங்களுக்கு தேவைப்படும் இரசாயன பொருள்கள் இம்முறை அனுப்பப்படமாட்டாதாம்.

இரசாயனப் பொருள்களை அனுப்புவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி தர மறுத்து விட்டது.

இதனால் விஞ்ஞானபீட, மருத்துவபீட மாணவர்களின் போதனைகள் பெருமளவில் பாதிக்கப்படும். முக்கிய பரிசோதனைகள் செய்ய முடியாத நிலை தோன்றும்.

மாணவர்களின் கல்வியைக் குழப்பும் ஒரு நடவடிக்கை இது என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் கவலை தெரிவித்தன,

இதேவேளை —

பல்கலைக்கழகத்தில் ஜெனரேட்டருக்குத் தேவைப்படும் டீசல், பெற்றோல் என்பனவும் வழங்கப்பட அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## மீண்டும் இந்தியா வென்றது

நாக்பூர், டிச. 2

நாக்பூரில் நேற்று நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி, இலங்கை அணியை 19 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி குறிக்கப்பட்ட 45 ஓவர்களில் 5 விக்கட்டுகள் இழப்புக்கு 245 ஓட்டங்களை எடுத்தது. ரவி சாஸ்திரி 101 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கை அணி ஏழு விக்கட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களை எடுத்தது. அரவிந்த டி சில்வா 104 ஓட்டங்களை எடுத்தார். (உ-எ)

## சீன மந்திரி இலங்கை வருகிறார்

கொழும்பு, டிச. 2

சீன வெளியுறவு அமைச்சர் சியா சீ சென் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இலங்கைப் பிரதமர் டி. பி. விஜேதுங்காவின் அழைப்பை ஏற்று இவர் கொழும்பு வருகிறார் என அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## விஜயலட்சுமி பண்டிட் காலமானார்

புதுடில்லி, டிச. 2

இந்தியாவின் பழம் பெரும் ராஜதந்திரியான திருமதி விஜயலட்சுமி பண்டிட் நேற்றுக் காலை டேராதுனில் காலமானார். இவருக்கு வயது 90.

ஐ.நா சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்ற இவர் இந்தியாவின் முதலாவது பிரதமரான பண்டிட் ஜவஹர்லால் நேருவின் சகோதரியாராவார்.

சட்டசபை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், ஆளுனர் ஆகிய பதவிகளை வகித்த இவர் 60 ஆண்டுகளாக அரசியல் பணி புரிந்தார்.

இவரின் சேவைகளைப் பாராட்டி இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் 21 கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. [இ-எ]

## ஒலிப்பதிவு நாடா அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிச. 2

''வேங்கைகளின் விடுதலை வேதங்கள்'' என்ற பாடல் ஒலிப்பதிவுநாடாவின் அறிமுக விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு விடுதலைப் புலிகள் கலை, கலாசார பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் இவ்விழாவில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், கலாநிதி திரு. நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் பாடல்கள் பற்றிய அறிமுகவுரையை நிகழ்த்துவர். [அ]

## ஒரே மணியில் ஐவரை கடித்த நாய்

சாவகச்சேரி, டிச. 2

ஒரே நாளில் ஒரு மணித்தியால நேரத்துக்குள் ஐவரைக் கடித்த நாய் ஒன்று எவரது பிடியிலும் சிக்காமல் தப்பிச் சென்றுவிட்டது.

கடந்த வாரம் மட்டுவில் மடத்தடிச் சந்தியில் இச் சம்பவம் நடைபெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரும் இந்த நாயால் கடியுண்டார்.

இது விசர் நாயாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. [இ-31]

## இன்று ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச. 2

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் பிரதான கிளையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை ஓய்வூதியம் பணமாக வழங்கப்படும் என்று பிரதான முகாமையாளர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை—

யாழ் நகரிலுள்ள ஏனைய வங்கிகள் நாளை முதல் இயங்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. சபாபதி பரம்சோதி

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

ஆண்டவன் படைப்பில்: 17 – 07 – 1924

ஆள்பவன் அழிப்பில்: 19 – 10 – 1990

உயிரைக் காக்க ஓடுகிறேன் என்று, சொல்லிப் போன உங்களை பாதி, வழிதனில் பாவிகள் குண்டு போட்டு, பறித்து விட்டனரோ? உம் உயிரை! வாழ்ந்தகாலம் முழுவதும்– தன்னலமற்று, பண்புடனும், கொள்கையுடனும், அன்புடனும், வாழ்ந்து மறைந்த நாட்கள் நாற்பத்தைந்து தான், ஓடி மறைந்தாலும் நின் திருமுகம், எம் கண்ணில் இருந்து அகலாது. இறுதி யாத்திரை செல்வதற்கும், இனத்தார் சுற்றம் கலப்பதற்கும், பொறுதியற்ற காலந்தன்னில், பொசுக்கென விட்டெமை போனதேனோ?

அன்பு மனைவி,
குடும்பத்தினர்.

[14990]

## ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், டிச. 2

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் முகாமில் இருந்த இரு சிப்பாய்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## வழிபாட்டுக்குச் சென்றவர் வீட்டில் திருடர் கைவரிசை

மங்கிய மாலைப்பொழுதில், வைமல் வேளையில் வீட்டுக்காரர்கள் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற சமயம் பார்த்து, திருடர்கள் வீட்டில் புகுந்து நகைகள், பணம் மற்றும் புடைவைகளைக் களவாடிச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் நடைபெற்றது.

வீட்டுக்காரர்கள், தமது வளவில் உள்ள வைரவர் கோவிலுக்குச் சென்று விளக்கு வைத்து வழிபாடு நடத்துவதற்காக மாலை 5.30 மணிக்குப் போய்விட்டு 6.30 மணியளவில் திரும்பினார்கள்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சூட்கேசுகளைக் காணவில்லை எனப் பார்த்தபோது திருட்டு நடந்தது தெரியவந்தது.

களவாடப்பட்ட சூட்கேசுகளில் சுமார் 9 பவுண் நகைகள், ரொக்கப்பணம், பெறுமதி வாய்ந்த உடுப்புகள் என்பன இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [அ–15]

### வளைகுடா நெருக்கடி:

## புஷ்ஷின் அறிவிப்பால் திடீர்த் திருப்பம்!

வாஷிங்டன், டிச. 2

ஈராக்குடன் பேச்சு நடத்துவதற்கு அமெரிக்கா தயார் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று முன்தினம் அறிவித்ததை அடுத்து வளைகுடாப் பிரச்சினையில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குவைத்தை விட்டு ஈராக் உடனடியாக வெளியேற வேண்டும் எனக் காலக்கெடு விதித்தும்—

தவறினால் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரம் அளித்தும் ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் எடுத்த கையோடு ஜோர்ஜ் புஷ் பேச்சுவார்த்தைக்கு இணங்கியிருக்கிறார்;

புஷ்ஷின் இந்த அறிவிப்பு உலக அரசியல் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் புஷ்ஷின் அறிவிப்பை ஏற்று அமெரிக்காவுக்குத் தனது வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸை அனுப்புவதற்கு ஈராக் உடனடியாக இணக்கம் தெரிவித்தது.

தாரீக் அஸீஸின் அமெரிக்க விஜயத்தைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு செல்வார் என்றும் அறிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்கான இணக்கமும், ஏற்பாடும் நடக்கும் அதே வேளை வளைகுடாப் பகுதியில் அமெரிக்க இராணுவ ஒத்திகை நிகழ்வுகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. [உ]

## குடாநாட்டில் கார்த்திகை தீபம்

யாழ்ப்பாணம், டிச. 2

குடாநாட்டின் அனேகபகுதிகளில் நேற்று கார்த்திகைத் தீபத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது யாழ் நகர், நல்லூர் மற்றும் எல்லாப் பகுதிகளிலும் உள்ள வீடுகளில் ஏற்றப்பட்ட தீபங்களால் அந்தப் பகுதிகள் எங்கும் பிரகாசித்தன.

சர்வாலயங்களில் தீபங்கள் ஏற்றப்பட்டு பூசைகள் நடைபெற்றன. [ஒ-6]

## மாவிட்டபுரத்தில் பெண் போராளி வீரமரணம்

நேற்றுமுன்தினம் மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்ற நேரடிமோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளியான யோகா (தம்பித்துரை சாமி சீதாலட்சுமி-மயிலிட்டி) வீரமரணமடைந்தார். [உ]

## சமரசமாகத் தீர்க்கவேண்டும்

''அயோத்தியில் ராமர் கோயில் இடிக்கப்பட்ட பின்னரே பாபர் மசூதி கட்டப்பட்டதா?'' என்பதை ஆராய்வதற்கு விசாரணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தி பிரதமர் சந்திரசேகரைக் கேட்டுள்ளார்,

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் பிரச்சினையை சமரசமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்று முடிவாகியது, (அ-6)

### அரச சார்பற்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகாம்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 500 குடும்பங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனித்து வந்தன.

இந்தக் காலத்தில் சுமார் இரண்டரைக்கோடி ரூபாவை இந்த நிறுவனங்கள் செலவிட்டுள்ளன. [ஒ.5]

### மண்டைதீவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டியிருந்த கம்பம் ஒன்றைப் பிடித்து தொங்கிக் கொண்டிருந்தார்.

சுமார் 7 மணி நேரத்தின் பின்னர் நேற்றுக்காலை 8 மணியளவில் அவ்வழியே வந்த மீனவர்களின் மற்றொரு படகு அவரைக் காப்பாற்றி கரைசேர்த்தது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த வைத்தியான் இராசேந்திரம் [வயது 60], இராயப்பு பிரான்ஸிஸ் [வயது 45] ஆகிய இருவரினதும் சடலங்கள் பின்னர் சேதமுற்ற படகிலிருந்து மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் சவுரியான் மரியதாஸ் [வயது 35] என்பவரே காயமுற்றார். [உ–15-5-51]

## நாகர்கோவிலில் அகதிகள் நடத்திய ஊர்வலம்!

யாழ்ப்பாணம், டிச. 2

வலி. வடக்கில், மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சென்று நாகர்கோவிலில் அகதிகளாகத் தங்கியுள்ள மக்கள் அங்கு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

கடந்த திங்கட்கிழமை நாகர்கோவிலில் இருந்து மருதங்கேணி வரை- சுமார் 11 மைல் தூரம் – மழையில் நனைந்தபடி, சுலோக அட்டைகளை தாங்கியபடி அகதிகள் ஊர்வலம் சென்றனர்.

இடம் பெயர்ந்த மக்களுக்கான 4 ஆம் கட்ட நிவாரண வழங்கலில் ஏற்பட்ட இழுபறி நிலையைக் கண்டித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

மருதங்கேணியைச் சென்றடைந்த அகதிகள் அங்கு உதவி அரச அதிபர் பணிமனையின் முன் உண்ணாவிரதம் இருந்தனர். உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

உதவி அரச அதிபர் அளித்த உறுதி மொழியை அடுத்து உண்ணாவிரதம் இருந்தவர்கள் கலைந்து சென்றனர். [ஒ-68]

### யாழ். செயலகத்தில்

## அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கூட்டம் நாளை

யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை யாழ். செயலகத்தில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற இருக்கிறது.

இக் கூட்டத்தில் சகல உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களைப் பராமரிப்பது சம்பந்தமாக கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது. [ஒ–6]

## நாய் வளர்ப்போருக்கான அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் குறைக்கும் முகமாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனவே நாய் வளர்ப்பவர்கள் அவற்றை வீட்டு வளவிற்குள்ளேயே வைத்திருக்கவேண்டும். கட்டாக்காலியாகத் திரிபவை எம்மால் பிடிக்கப்படும். இந்நடைமுறை 5 ஆம் திகதிமுதல் அமுலாகிறது. கட்டாக்காலி நாய்களைப் பிடித்து, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அல்லது பிரிவுச் செயலகத்தில் ஒப்படைத்து ஒரு நாய்க்கு 5 ரூபா வீதம் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

## உப்புக் கூட்டுத்தாபனம்

வடபகுதி உப்புக் கூட்டுத்தாபன ஊழியரின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக மேல் நடவடிக்கை பற்றி, ஆராயும் வடபிராந்திய நிர்வாக நிலை அதிகாரிகள் கூட்டம் 4-12-1990 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அளவெட்டியில் உள்ள உற்பத்தி முகாமையாளர் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

மா. ஜே. த, மனோகரன்.
உதவி உற்பத்தி முகாமையாளர்

[C/5485]

## நாளை முதல் பாடசாலைகள்

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதால், நாளை முதல் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

நீல-வெள்ளை நிறங்களைக் கொண்ட கொடிகளைப் பறக்கவிடாத பாடசாலைகளில் அவற்றை பறக்க விடும்படியும், பதுங்கு குழிகளை அமைத்துக்கொள்ளாத பாடசாலைகளும் அவற்றை கூடிய விரைவில் அமைக்குமாறும் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [ஒ–6–5]

### இரத்தம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக ''ஓ'' நெகட்டிவ், ''ஓ'' பொஸிட்டிவ் வகை இரத்தமே தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ–15)

### வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூறப்பட்டது.

தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதியில் இரண்டு தடவைகள் ஹெலிகள் இறங்கிச் சென்றதாகவும்—

புலிகளின் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் முன்னேற முடியாமல் சேமமடுவி... டிருப்பதாகவும் கூறப்பட்டது. [உ]

### ரயில்..:

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் ரயில் தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் ஆகியவற்றை பொது மக்கள் எக்காரணம் கொண்டும் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களால் இப்பொருள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றை உடனடியாக எமது பிரதேச, பிரிவுச் செயலகங்களில் திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்ந்தும் இவ்வாறான பொருள்கள் பாவனைக்கு ... தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்று உள்ளது. (அ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### பெனடிற் யோசவ்

[சிறைச்சாலை உத்தியோகத்தர்]

மலர்வு:
03 — 01 — 1935
உதிர்வு:
02 — 12 — 1988

''சீவியத்தில் என்னை
நேசித்தவர்களே
மரணத்தில் என்னை
மறவாதீர்கள்''

ஆறென்றால்
ஆறுவோமோ
ஆறிவிட்டால்
தேறுவோமோ
ஆண்டு
இரண்டாவிடினும்
நீ நிறைந்த
நெஞ்சங்கள்
நினை மறந்து
நிம்மதி
கண்டிடுமோ.



பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

29/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

[14987]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விசாலாட்சி சிவபாலசிங்கம்

திருமதி விசாலாட்சி சிவபாலசிங்கம் அளவெட்டி வடக்கில் 1-12-90 இல் அகால மரணமானார்.

இவர் சிவபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவகுமாரன், உமைகுமாரன் [காலம் சென்றவர்] சுவர்ணமாலா, இரஞ்சிதமாலா ஆகியோரின் அருமைத் தாயாரும், கைலைநாதன், ஆனந்தி ஆகியோரின் அருமை மாமியாரும், சரவணன், வெண்ணிலா, நவநீதன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-12-90 சனிக்கிழமை பிற்பகல் அளவெட்டியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு சிவபாலசிங்கம்,
(குடும்பத்தினர்)

இராவத்தை,
அளவெட்டி.

[15012[

### திரு. வேலுப்பிள்ளை சிவகடாட்சம்

(மெக்கானிக்)

புளியங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகடாட்சம் காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், உருத்திராணியின் அன்புக்கணவரும், கெங்கா ரூபா, ரூபன், ரமணன், வசந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2 - 12 -90 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் புளியங்கூடலில் நடைபெறும்.

தகவல்:

குடும்பத்தினர்

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

[15009]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org